# உத்தேசிக்கப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் (ப.எ.ச) (ATA) முக்கிய கரிசனைகள் - மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி) மே 2023

ஆர்வம் கொண்ட தரப்புகளால் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் (ப.எ.ச) தொடர்பான முன்மொழிவுகளின் சமர்ப்பணத்திற்காக நீதி அமைச்சினால் மே 2, 2023 அன்று விடுக்கப்பட்ட அறிவித்தலிற்கான பதிலிறுப்பாக, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி) அவதானித்த, மற்றும் கடந்த காலத்தில் தொடர்ந்து எழுப்பி வந்த முக்கிய கரிசனைகளைப் பிரதிபலிக்கும் ஓர் ஆரம்ப கருத்தினைப், பின்வரும் ஆவணம் கொண்டுள்ளது.

பயங்கரவாதக் குற்றத்தின் அதீத பரந்த கட்டமைப்பு, நீடித்த விளக்கு மறியல் காலங்களுடன் குற்றச்சாட்டின்றி தடுத்து வைத்தல், நீதித்துறைக்குப் பாதகமாக ஆட்சித்துறைக்கு அளிக்கப்பட்டுள்ள அதிக அதிகாரம், மற்றும் அதிகரித்த இராணுவமயமாக்கல் உட்பட கீழே எடுத்துக் காட்டப்பட்டுள்ள பிரச்சினையான ஏற்பாடுகளின் அளவுகளின் அடிப்படையில் - பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை (ப.எ.ச) மீளப்பெறுவதற்கு அரசாங்கத்தை மா.கொ.நி வலியுறுத்துகிறது.

தற்போதைய சமயத்தில், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கு, அரசாங்கத்தாலான இந்தக் காலந் தாழ்த்திய மற்றும் அவசர முயற்சிகள், எழுப்பப்பட்ட அடிப்படைக் கரிசனைகள் மீது கவனம் கொள்வதில் குறைவுபட்டது மட்டுமன்றி அதனை வரைவதில், கலந்தாலோசனைக்கு மட்டுப்படுத்தப்படுத்திய வாய்ப்புகள் கொண்ட ஒரு பிரச்சினையான செய்முறையின் ஒரு உருவாக்கமாகவும் அது இருக்கும். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் உண்மையான பாதிப்பு, மற்றும் அதனால் ஏற்பட்ட மனிதாபிமானச் செலவு, சித்திரவதை, மற்றும் துஷ்பிரயோகம் என்பவற்றைப் புரிந்து கொள்ளும் முகமாக, நீண்ட காலமாகத் தடுத்து வைத்திருக்கப்பட்டுள்ளவர்கள் மற்றும் அவர்களின் நெருங்கிய இரத்த உறவினர்கள் உட்பட, பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட சமூகங்கள்/தனிப்பட்டவர்களைக் கலந்தாலோசிப்பதை எந்தவொரு உண்மையான கலந்தாலோசனையும் தேவைப்படுத்தும். பயங்கரவாதத் தடைச் சட்டம் எவ்வாறு உபயோகிக்கப்பட்டு மற்றும் துஷ்பிரயோகிக்கப்பட்டது என்பதைக் கணக்கில் கொள்ளாதிருப்பதென்பது மேலும் துஷ்பிரயோகங்களுக்கு மட்டுமே இட்டுச் செல்லும்.

எதிர்கால சட்டச் சீர்திருத்தங்களுடன் சம்பந்தப்பட்ட அனைத்துப் பங்குதாரர்களுடன் ஒரு வெளிப்படையான மற்றும் ஒரு கலந்தாலோசனைச் செயன்முறையில் ஈடுபடுவதற்கு மா.கொ.நி அதன் தயார்நிலையை தொடர்ந்து தெரிவிக்கிறது.

**‘பயங்கரவாதம்’ என்பதின் வரைவிலக்கணம்**

- உத்தேசிக்கப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் பயங்கரவாதத் தவறு என்பதின் கீழ் பரந்தளவிலான சட்டங்களை உள்ளடக்குகிறது. சட்டங்களின் பட்டியல் தெளிவற்றது என்பதுடன் அவை பரந்துபட்ட வகையில் பொருள்கோடல் செய்யப்பட முடியும். இந்தப் பரந்த வரைவிலக்கணம், யார் பயங்கரவாதத்திற்கு குற்றஞ் சாட்டப்பட முடியும் மற்றும் கைது, தடுத்து வைத்தல் மற்றும் ஏனைய கட்டுப்பாடுகளுக்கு உள்ளாக முடியுமென்பதைத் தீர்மானிப்பதில் ஆட்சித்துறைக்கு பரந்த சுதந்திரத்தை அளிக்கிறது. உண்மையான பயங்கரவாதத்தின் செயற்பாடுகளிலிருந்து பெரிதும் விலகிய சூழ்நிலைகளில், அல்லது சிறுபான்மையினர் அல்லது மனித உரிமைப் பாதுகாவலர்களுக்கு எதிராக ஒரு பாரபட்ச மற்றும் பிரிவினையான முறையில் உபயோகிக்கப்படக் கூடிய ஓர் உண்மையான ஆபத்தையும் கூட அது ஏற்படுத்துகிறது.

- ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயற்பரப்பிற்குள், உலகளவில் இணங்கிக் கொள்கின்ற ஒரு

வரைவிலக்கணம் இல்லாத நிலையில், ''பயங்கரவாதம்'' என்ற கருத்தை விபரிக்கும் பல்வேறு சொற்கள் அதனைக் குறித்து வெளியிடப்பட்டுள்ளதைக் காண்பதற்கு முடியும்.

- உள்நாட்டு சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு பாதுகாப்புச் சபைத் தீர்மானம் 1373 (2001) இன் கீழ் இவர்களது கடப்பாடுகளைத் திருப்தி செய்வதில் நாடுகளுக்கு உதவுவதை நோக்காகக் கொண்ட பாதுகாப்புச் சபைத் தீர்மானம் 1373 (2001), 'பயங்கரவாதம்' என்பதை பின்வருமாறு குறிப்பிடுகிறது: *''குடிமக்களுக்கு எதிராக மரணத்தை அல்லது கடுமையான உடற் காயங்களை ஏற்படுத்துவதற்குப் புரியப்பட்ட அல்லது பொதுமக்கள் அல்லது ஆட்கள் அல்லது குறிப்பிட்ட ஆட்களின் ஒரு குழுவிற்குள் எதிராக, ஒரு பீதி நிலையைத் தூண்டும் நோக்கத்தோடு, பணயக் கைதிகளாக பிடித்தல், ஒரு மக்கட் தொகையை அச்சுறுத்தும் அல்லது பயங்கரவாதம் தொடர்பான சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் உடன்பாட்டு நெறிமுறைகளில் வரையறுக்கப்பட்டவாறும் மற்றும் அவற்றின் நோக்கினுள் குற்றங்களைக் கட்டமைக்கும் ஏதேனும் ஒரு நடவடிக்கையை மேற்கொள்வதற்கு அல்லது அதனை மேற்கொள்வதிலிருந்து விலகியிருப்பதற்கு ஓர் அரசாங்கத்தை அல்லது சர்வதேச ஸ்தாபனத்தை நிர்ப்பந்தித்தல் என்பவை, உட்பட்ட குற்ற நடவடிக்கைகள் ஓர் அரசியல், தர்க்கவியல், கருத்தியல், ஜாதி, இனத்துவம், மதம் அல்லது அவ்வாறான தன்மைகளின் பரிசீலனைகளால் எந்தவொரு சந்தர்ப்பத்தின் கீழும் நியாயப்படுத்தப்படக்கூடியவையல்ல என்பதுடன் அவ்வாறான நடவடிக்கைகளை தடுக்கப்படுவதற்கு, தடுக்கப்படவில்லையாயின், அவ்வாறன நடவடிக்கைகள் அவற்றின் கடுமையான தன்மைக்கு அமைவாகத் தண்டனைகளால் தணடிக்கப்படுவதற்கும் அனைத்து நாடுகளையும் கோருகிறது.''* (பந்தி 3)

- பொதுச் சபைத் தீர்மானம் 49/60, 'பயங்கரவாதம்' ஆக வரைவிலக்கணப்படுத்தப்படும் தன்மை கொண்ட ஓர் எண்ணற்ற ஆயுத நடவடிக்கைகளை ''பயங்கரவாத'' நடவடிக்கைகளாகக் கருதிக் குற்றமயப்படுத்துவதற்கு, முனைகிறது: *''அரசியல் நோக்கங்களுக்காக பொதுமக்கள் அல்லது ஆட்கள் அல்லது குறிப்பிட்ட ஆட்களின் ஒரு குழுவிற்குள் ஒரு பயப் பீதி நிலையை தூண்டிவிடுவதற்கு திட்டமிட்ட அல்லது கணிக்கப்பட்ட நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதற்கு வேண்டப்படக்கூடியதான ஓர் அரசியல், தர்க்கவியல், கருத்தியல், ஜாதி, இனத்துவம், மதம் அல்லது அவ்வாறான தன்மைகளின் பரிசீலனைகளால் எவ்வாறான கவனங்களின் கீழும், எந்த சந்தர்ப்பங்களிலும் நியாயப்படுத்தப்பட முடியாதவையாகும்.''* (பந்தி 3).

- சர்வதேசப் பயங்கரவாதம் தொடர்பான விரிவான உடன்படிக்கையின் வரைபின் உறுப்புரை 2, *''எவரேனும் ஆள் இந்த உடன்படிக்கையின் அர்த்தத்திற்குட்பட்ட வகையில் தவறொன்றைப் புரிகின்றதுடன் அந்நபர், எந்தவொரு விதத்திலும், சட்டவிரோதமாக மற்றும் வேண்டுமென்றே, பின்வருபவற்றை ஏற்படுத்தும் நோக்கில் ஒரு நடவடிக்கையை மேற்கொள்கிறார்:*
  *(அ) எவரேனும் நபருக்கு இறப்பு அல்லது கடுமையான உடற் காயங்கள்; அல்லது*
  *(ஆ) ஓர் அரச அல்லது அரசாங்க வசதி, ஒரு பொதுப் போக்குவரத்து முறை, தொடர்பாடல் முறை அல்லது அவ்வாறான ஓர் இடம், வசதி அல்லது முறைக்கு அதிக அழிவை ஏற்படுத்தும் நோக்குடன் உட்கட்டமைப்பு வசதி, அல்லது அந்த அழிவு பெரும் பொருளாதார இழப்பை ஏற்படுத்துகின்ற அல்லது அநேகம் ஏற்படுத்துகின்றதான கடுமையான சேதம்; இந்த நடவடிக்கையின் நோக்கம், அதன் தன்மை அல்லது சூழ்நிலை, ஒரு மக்கட் தொகையை அச்சுறுத்துவதற்கு, அல்லது ஒரு அரசாங்கத்தை அல்லது ஒரு சர்வதேச ஸ்தாபனத்தை ஏதேனும் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு அல்லது அதனை மேற்கொள்வதிலிருந்து தவிர்திருப்பதற்கு நிர்ப்பந்தித்தல்.''*

**தண்டனைகள்**

- பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் உறுப்புரை 4(1)(அ) சட்டத்தின் கீழ், நபரொருவர், யாரேனும் மற்றொரு நபரின் இறப்பிற்காகக் குற்றத் தீர்ப்பக்கு மரண தண்டனை விதிக்கப்படல் வேண்டும் என ஏற்பாடளிக்கிறது. மரண தண்டனையை ஒழித்தல்/சட்ட ரீதியான காலந் தாழ்த்தலுக்கும் மற்றும் ஏதேனும் மரண தண்டனை கட்டளைகளுக்கு ஜனாதிபதி கையொப்பம் இடாதிருத்தல் வேண்டும் என நீதிமுறையின் சிறந்த நடைமுறைகள் பரிந்துரைக்கும் ஒரு பின்னணியில், இவ்வேற்பாடு ஒரு பின்நோக்கிய சட்ட நடைமுறையாகும்.

- இச்சட்டத்தின் கீழ் புதிதாகச் சேர்க்கப்பட்ட 'பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள்' மற்றும் 'பயங்கரவாதப் பதிப்புகளைப் பரப்புரை செய்தல்' ஆகிய தவறுகள் தெளிவற்றவை மற்றும் பரந்த அடிப்படையில் வரையறுக்கப்பட்டவையாக உள்ளன, விசேடமாக அவை சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் என்பவற்றுக்கு எதிராக துஷ்பிரயோகம் மற்றும் சுரண்டப்படும் ஆபத்துக் கொண்டவை.

**இராணுவமயமாக்கல்**

- உத்தேசிக்கப்பட்ட பயங்கரவாத தடைச் சட்டம் பொலிஸ், ஆயுதப் படைகளின் உறுப்பினர்கள் மற்றும் கரையோரக் காவலர்கள் ஆகியோருக்கு பிடியாணையின்றி ஆளொருவரைக் கைது செய்வதற்கு அளவுக்கதிகமான பரந்த அதிகாரத்தை வழங்குகின்றன. இது, பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் (PTA) அவதானிக்கபட்டதிற்கும் அப்பால் இராணுவமயமாக்கலை அங்கீகரிக்கிறது. ஆயுதப் படைகள் மற்றும் கரையோரக் காவல் படைகளின் கைது செய்தலை மேற்கொள்வதற்கான அதிகாரம் அவசரகால நிலைமைகளிற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. தேடுதல் மற்றும் கைப்பற்றுதலுக்கும் கூட ஆயுதப் படைகள் மற்றும் கரையோரக் காவல் படைகளுக்கு இதைப் போன்ற அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

**நீண்ட கால விளக்குமறியல்/தடுத்து வைத்தல்**

- ஆளொருவருக்கு எதிராக குற்றங்கள் முன்வைக்கப்படுவதற்கு முன் அவ்வாளை விளக்கு மறியலில் வைத்திருப்பதற்கான காலம் ஒரு வருடமாகக் குறிப்பிடப்பட்டாலும், விளக்கு மறியலைக் கால வரையறையின்றி நீட்டிக்க கோருவதற்கான ஏற்பாடு இச்சட்டத்திலுள்ளது.

- முன்னம் பாதுகாப்பு அமைச்சரிடம், அளிக்கப்பட்டிருந்த தடுத்து வைத்தல் கட்டளைகளை விடுக்கும் அதிகாரம், தற்போது இச்சட்டத்தின் கீழ் எவரேனும் பிரதிப் பொலிஸ் மா அதிபரிடம் அளிக்கப்பட்டுள்ளது.

- ஒரு பிரதிப் பொலிஸ் மா அதிபரால் விடுக்கப்படும் ஆரம்பத் தடுத்து வைத்தல் கட்டளைகள் ஒரு நீதவானின் அனுமதியின்றி மூன்று மாதங்கள் வரை நீட்டிக்கப்படுவதற்கும், இந்த ஆரம்ப மூன்று மாதங்களுக்கும் அப்பால், நீதவானின் அனுமதியுடன் மொத்தமாக ஒரு வருடத்திற்கும் தடுத்து வைத்தல் நீட்டிக்கப்பட முடியும்.

**மீளாய்வுப் பொறிமுறைகளின் சுயாதீனம்**

- ஒரு தடுத்து வைத்தல் கட்டளையின் விடுத்தலுக்கு எதிராக நிர்வாக நிவாரணம் அளிக்கப்படல் வேண்டுமாயின், அதனைத் தீர்மானிப்பதற்கு ஒரு மீளாய்வுச் சபை மற்றும் ஒரு சுயாதீனமான மீளாய்வுக் குழு இருக்கையில், இந்த குழுக்கள் அல்லது சபைகளும் ஜனாதிபதியின் தனியான தற்றுணிபில் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டுள்ளதால், இவற்றின் சுயாதீனம் ஐயத்திற்குரியது.

**நிறைவேற்று அதிகாரங்கள்: கட்டளைகளும் ஒழுங்குவிதிகளும்:**

- தடைசெய்தல் கட்டளைகளை மேற்கொள்வதற்கு ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரம் பரந்துபட்டதுடன், அபிப்பிராய பேதங்களைக் குறைப்பதற்கு மற்றும் சட்டபூர்வ மனித உரிமைக் கரிசனைகளுக்காக வாதுரைக்கும் ஸ்தாபனங்களை தடைசெய்யும் ஒரு விதத்திலும், துஷ்பிரயோகிக்கப்பட முடியும். ஒரு தடைசெய்யும் கட்டளையை சவாலுக்குட்படுத்துவதில் ஆர்வங் கொண்ட எந்த தரப்புக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் பயனுறுதியான நீதிமுறைப் பரிகாரம் அளிக்கப்படவில்லை. நடைமுறையிலுள்ள சட்டமூலம் பயனுறுதியில்லாத ஒரேயொரு நீதிமுறை வழியை அளிக்கிறதுடன், அது அரசு/சட்டமா அதிபர் திணைக்களத்திலான தொழில்நுட்ப ரீதியான சவால்களுக்கு உட்பட்டதாகும்.

- ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கு ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கான அளவு பரந்ததானதுடன், சட்டத்தின் 'நோக்கங்கள் மற்றும் கொள்கைகளுக்கு பயன் அளிப்பதற்கு ஒழுங்குவிதிகள் ஆக்கப்படுவதை அனுமதிக்கிறது. இது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் (PTA) கீழ், தசாப்த காலங்களாகத் துஷ்பிரயோகிக்கப்பட்ட, ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கான, பரந்த அதிகாரத்தை ஒத்ததாகும். சட்டத்தின் நோக்கங்கள் மற்றும் கொள்கைகளை பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் குறிப்பாகத் தெரிவிக்காத நிலையில், விசேடமாகக் கரிசனைக்குரியதாகும். சட்டம் பற்றிய முன்னுரை மற்றும் அதன் நீண்ட தலைப்பும் அதிகம் பரந்ததுடன் இவ்விடயம் தொடர்பில் ஏதேனும் பயனுள்ள அறிவுறுத்தல்களைத் வழங்குமளவிற்கு தெளிவற்றவையாகும்.

- புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குவதற்கு ஒழுங்குவிதிகளை ஆக்குவதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்தப் புனர்வாழ்வு நிகழ்ச்சித்திட்டங்களுக்கான ஆற்றுப் படுத்தல்கள், தன்னார்வத்திலானவை அல்லாதவையாக இருக்கலாமென்பதுடன், மேலதிகமாக, ஒரு சட்ட நீதிமன்றத்தால் தவறொன்றுக்காகக் குற்றம் காணப்படாத ஆட்களையும் இந்தப் புனர்வாழ்வு

நிகழ்ச்சித்திட்டங்களுக்கு கட்டாயமாக அனுப்பும் தன்மை கொண்டவை என்பது கரிசனைக்குரியதாகும். இதன் மூலம், குற்றவாளியாக நிரூபிக்கப்படும் வரை ஒருவர் சுற்றவாளியாகக் கருதப்படல் வேண்டுமென்பது உட்பட நடமாட்டத்திற்கான சுதந்திரம் போன்ற பல்வேறு அடிப்படை உரிமைகளை அவை மீறுகின்றன.

மேலே எடுத்துக்காட்டிய கரிசனைகளின் கண்ணோட்டத்தில், பிரச்சினைக்குரிய ஏற்பாடுகளுடன் நிறைந்த உத்தேசிக்கப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை மீளப்பெறுவதற்கு, மா.கொ.நி அரசாங்கத்தை வேண்டுகின்றதுடன், பயங்கரவாதத்திற்கு எதிரான ஒரு சட்டத்தை வரையும் ஏதேனும் புதிய செய்முறை வெளிப்படையான, பொறுப்புக்கூறுகின்ற மற்றும் அனைத்து சம்பந்தப்பட்ட பங்குதாரர்களிற்கிடையிலான ஒரு வலுவான கலந்தாலோசித்தல் செய்முறையின் ஒரு விளைவாக இருப்பதற்கும் வலியுறுத்துகிறது.

எதிர்கால பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமொன்று, மேலே கூறப்பட்ட கரிசனைகளைக் கவனம் கொள்வதை அரசாங்கம் உறுதி செய்வதற்கும், டிசம்பர் 2021 இல் ஐ.நா விசேட விசாரணை அறிக்கையாளர்கள் ஏழு பேர்களால் உருவாக்கப்பட்ட ஐந்து தர நியமங்களுடன்[1] ஒத்திணங்குவதற்கும் மா.கொ.நி அரசாங்கத்தை வலியுறுத்துகிறது.

1.பயங்கரவாதத்தின் வரைவிலக்கணம் சர்வதேச விதிமுறைகளுடன் ஒத்திணங்கும் வகையில் வைத்திருத்தல்;

2. விசேடமாக அது வெளிப்படுத்தல், கருத்து, ஒருங்கு சேர்தல், மதம் அல்லது நம்பிக்கை என்பவற்றுக்கான சுதந்திரத்தை அலை பாதிக்கலாமெனும் இடத்து சட்ட ரீதியான உறுதிப்பாடு;

3. சுதந்திரத்தை எதேச்சாதிகாரமாகப் பறிப்பதைத் தடுத்தல்;

4.சித்திரவதை மற்றும் வலிந்து காணாமற்போதலைத் தடைசெய்தல்;

5. முறையான செய்முறை, நீதியான விளக்கம், நீதிமுறை மேற்பார்வை மற்றும் சட்ட ஆலோசனைக்கான வழிமுறையை உறுதிசெய்தல்.

[1] மனித உரிமைகள் உயர் ஸ்தானிகருக்கான அலுவலகம், ஐ.நா விசேட அறிக்கையாளர்களின் தொடர்பாடல், Ref.: OL LKA 7/2021, 9 டிசம்பர்r 2021 <https://spcommreports.ohchr.org/TMResultsBase/DownLoadPublicCommunicationFile?gId=26863> 28 மே 2023 அன்று அணுகப்பட்டது.